**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 589/2025**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **கணவாய்பிச்சை** | **Caste** | : |
| **Father's Name** | : இஸ்மாயில் மைதீன் | **Calling** | : **டீ - மாஸ்டர்** |
| **Village** | : **தோமையார் புரம்** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **54** |
| | | **Dated** | : **12.11.2025.** |

**12.11.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு. **கணவாய்பிச்சை** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் தோமையார் புரத்தில் குடியிருந்து டீ– மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்க சம்பவத்தில் இறந்த நாகூர் அம்மாள் எனது தங்கை. கடந்த 18.11.2024 ம் தேதி நான் காலை சுமார் 8

மணிக்கு டீ கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது எனது எனது மனைவி ஹ யர் நிஷா எனக்கு போன் செய்து எனது வீட்டருகே நாகூர் அம்மாளுக்கு விபத்து ஏற்பட்டதாகவும் சீக்கிரம் வருமாறும் சொன்னார். நான் 8.45 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். சம்பவம் பற்றி எனது மனைவிடம் விசாரித்த போது நாகூர் அம்மாள் எனது வீட்டின் முன்பாக குழாயில் தண்ணீர் பிடித்து கொண்டிருந்த போது மகேந்திர ஸ்க்கூல் வேன் அவர்களை வேகமாக கடந்து சென்றதாகவும் , உடனே அதே வேகத்தில் கவனக்குறைவாக ரிவர்சில் வந்ததாகவும் அப்போது நாகூர்அம்மாள் மீது மோதியதாகவும், அதில் அவருக்கு முகத்தில் காயம் பட்டதாகவும் சொன்னார். ஆஜர் எதிரிதான் அந்த வாகனத்தை ஓட்டியதாக சொன்னார். காயம் பட்ட நாகூர் அம்மாளை தனியார் ஆம்புலன்சில் அழைத்து சென்றேன். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்னர் நானும் எனது மகள் மெகராஜ்பானுவும் தாலுகா காவல் நிலையம் சென்று இது சம்மந்தமாக புகார் கொடுத்தோம். புகாரை நான் சொல்ல சொல்ல எனது மகள் எழுதினார். அதை நான் படித்து பார்த்து நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சம்பவத்தின் போது எனது மகளும் சம்பவ இடத்தில் தான் இருந்தள்ளார். புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப் பட்டு குறுக்கு விசாரணை–இல்லை</u>

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.11.13 10:14:33 +0530

Judicial Magistrate No.I

Dindigul.